# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI

| | |
|---|---|
| **STC. No.** | **121/2024** |
| **பெயர்:** | **மதியழகன்** |
| **தந்தை பெயர் :** | **பெரமையன்** |
| **வயது:** | **51/2026** |
| **ஊர்:** | **மூத்தாக்குறிச்சி, கொல்லடிகொல்லை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **தேங்காய் வியாபாரம்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **24th day of February 2026**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03:56 PM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. M. உஷா , (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. நான் பண்ணிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். நான் எத்தனை வருடங்களாக தேங்காய் வியாபாரம் செய்கிறேன் என்றால், 17 வருடங்களாக தேங்காய் வியாபாரம் செய்கிறேன். எதிரியை எனக்கு எப்படி பழக்கம் என்றால், என்னிடம் தேங்காய் வாங்குவதன் மூலம் பழக்கம். எதிரியானவர் என்னிடம் எத்தனை வருடங்களாக தேங்காய் வியாபாரம் செய்கிறார் என்றால், 2017-2018 ஆகும். 2018 க்கு பிறகு எதிரியானவர் என் கடைக்கு தேங்காய் வாங்க வரவில்லை. 2017-2018

வரை எவ்வளவு ரூபாய்க்கு எதிரியானவர் என்னிடம் பரிவர்த்தனை மேற்கொண்டிருப்பார் என்றால், சுமார் ரூ.50,00,000/- இருக்கும். என்னிடம் தேங்காய் கொள்முதல் செய்யும் நாளிலே பனத்தை கொடுத்துவிடுவாரா என்றால், இல்லை, சுமார் 15 – 20 நாட்கள் கழித்து பணம் தருவார். தேங்காய் வியாபாரத்தில் ஏற்படும் கடனிற்கு எதிரியிடம் ஏதேனும் ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால், இல்லை. 2017-2018 தேங்காய் வியாபரத்தின் போது எதிரியானவர் என்னிடம் தேங்காய் வாங்கியதற்காக பணம் கொடுக்கவேண்டியிருந்ததா என்றால், ரூ.5,50,000/- ஆகும். என்னுடைய நிருபணவாக்குமூலம் மற்றும் புகார் மனுவில் மேற்கூறிய விபரத்தினை நான் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. 2017-2018 ஆம் ஆண்டு தேங்காய் பரிவர்த்தனையில் எனக்கும் எதிரிக்கும் ஏதேனும் வங்கி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டதா என்றால், மேற்கொள்ளப்பட்டது. எதிரியானவர் வேறு ஒரு நபரின் வங்கி கணக்கில் இருந்தும் எனக்கு அனுப்புவார். மேற்கூறிய ரூ.5,50,000/- இன்னும் நிலுவையில் தான் இருக்கிறது என்றும், எதிரியானவர் இன்னும் பணத்தை கொடுக்கவில்லை என்று சொன்னால், சரிதான்.

2. எதிரியானவர் என்னிடம் எப்போது கடன்கேட்டார் என்றால், நான் பணம் கொடுத்த தேதியான 05.07.2024 ஆம் தேதிக்கு முன்பாக இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னர் என்னிடம் கேட்டார். கடன் கேட்டதைப்பற்றி என்னுடைய நிருபணவாக்குமூலம் மற்றும் புகார் மனுவில் கூறவில்லை என்று சொன்னால், சரிதான். நான் எதிரிக்கு கடன்கொடுத்த விபரம் யாருக்கு தெரியும் என்றால், எனது பணியாளர்களான குமரவேல் மற்றும் செல்லப்பட்டு என்பவர்களுக்கு தெரியும். நான் எதிரிக்கு எவ்வளவு கடன் கொடுத்தேன் என்றால், ரூ.10,00,000/- ஆகும். எதிரிக்கு ரூ.10,00,000/- எப்படி கொடுத்தேன் என்றால், ரொக்கமாக கொடுத்தேன். அந்த கடனிற்கு ஏதேனும் ஆவணம் பெற்றேனா என்றால், ஒரு காசோலை வாங்கிக்கொண்டேன். அந்த காசோலையின் எண்ணானது 88 68 41 ஆகும். அந்த காசோலையை எதிரியானவர் என்னுடைய குடேனில் வைத்து என் முன்னிலையிலே எதிரியானவர் பூர்த்தி செய்துகொடுத்தார்.

**முடிக்கப்பட்ட நேரம் 04:13 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்.திரு. மா விசால் ஆனந்த்

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.